

# SIVAPURANAM
## MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 21. கோயில் மூத்த திருப்பதிகம்

(தில்லையில் அருளியது)

அநாதியாகிய சற்காரியம்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)





# திருச்சிற்றம்பலம்

உடையாள் உன்தன் நடுவுஇருக்கும்
உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம்பலத்துஎம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்றே 1





முன்நின்று ஆண்டாய் எனை முன்னம்
யானும் அதுவே முயல்வுற்றுப்
பின்நின்று ஏவல் செய்கின்றேன்
பிற்பட்டு ஒழிந்தேன் பெம்மானே
என்னின்று அருளி வரநின்று
போந்திடு என்னாவிடில் அடியார்
உன்நின்று இவனார் என்னாரோ
பொன்னம்பலக் கூத்து உகந்தானே 2





உகந்தானே அன்புடை அடிமைக்கு

உருகா உள்ளத்து உணர்வு இலியேன்

சகந்தான் அறிய முறையிட்டால்

தக்கவாறு அன்றுஎன்னாரோ

மகம்தான் செய்து வழிவந்தார்

வாழ வாழ்ந்தாய் அடியேற்குஉன்

முகம்தான் தாராவிடின் முடிவேன்

பொன்னம் பலத்துஎம் முழுமுதலே





முழுமுதலே ஐம்புலனுக்கும்
மூவர்க்கும் என்தனக்கும்
வழிமுதலே நின் பழஅடியார்
திரள்வான் குழுமிக்
கெழுமுதலே அருள் தந்துஇருக்க
இரங்குங்கொல்லோ என்று
அழும் அதுவேஅன்றி மற்றுஎன்
செய்கேன் பொன்னம்பலத்து அரைசே

4





அரைசே பொன்னம்பலத்து ஆடும்
அமுதே என்றுஉன் அருள்நோக்கி
இரைதேர் கொக்குஒத்து இரவுபகல்
ஏசற்று இருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துஉன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசாது இருந்தால் ஏசாரோ





ஏசா நிற்பர் என்னைஉனக்கு
அடியான் என்று பிறர்எல்லாம்
பேசா நிற்பர் யான்தானும்
பேணா நிற்பேன் நின்அருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்கும்
திருவோ லக்கஞ் சேவிக்க
ஈசா பொன்னம்பலத்துஆடும்
எந்தாய் இனித்தான் இரங்காயே 6





இரங்கும் நமக்கு அம்பலக்கூத்தன் ge
என்று என்று ஏமாந்திருப்பேனை
அருங்கற்பனை கற்பித்து ஆண்டாய்
ஆள்வார் இலிமாடு ஆவேனோ
நெருங்கும் அடியார்களும் நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்துவர எங்கள்
வாழ்வே வாஎன்று அருளாயே





அருளாது ஒழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்துஆண்ட
பொன்னே பொன்னம்பலக் கூத்தா
மருளார் மனத்தோடு உனைப்பிரிந்து
வருந்துவேனை வாஎன்றுஉன்
தெருளார் கூட்டங் காட்டாயேல்
செத்தே போனாற் சிரியாரோ





சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டுதிரண்டுஉன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வேறு இருந்து உன்திருநாமம்
தரிப்பார் பொன்னம்பலத்து ஆடும்
தலைவா என்பார் அவர்முன்னே றும்
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே 9





நல்காது ஒழியான் நமக்கு என்றுஉன்
நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா
வணங்கா மனத்தால் நினைந்துஉருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம்பலம் என்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கு இரங்கி
அருளாய் என்னை உடையானே 10



ஸ்ரீ மாணிக்கவாசகர்